திண்டுக்கல்ல அருகே

தனியார் பள்ளி வேன் கவிழ்ந்து மாணவ, மாணவிகள் காயம்

திண்டுக்கல்,டிச.04–

திண்டுக்கல் திருச்சி நான்கு வழிச்சாலையில் பண்ணை மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் ஒன்றாவது முதல் ஐந்தாவது படித்து வரும் மாணவ மாணவிகளை பள்ளிக்கு சொந்தமான வேன் திருச்சி சாலையில் உள்ள என் ஜி ஓ காலனி, சீலப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏற்றுக்கொண்டு பள்ளிக்கு திரும்பிக் கொண்டிருந்தது. இந்த வேனில் மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகளில் பயிலும் 29 மாணவ மாணவிகள் இருந்தனர்.வேன் பள்ளி வாயில் முன்பு நுழையும் போது அதன் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த பள்ளத்தில் தலைக்குப்புற கவிழ்ந்தது.

இதில் எட்டுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு சிறு காயம் ஏற்பட்டது தற்பொழுது அவர்கள் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.விபத்து குறித்து தாடிக்கொம்பு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கோவில்பட்டியில்

மதுரை நர்சிங் கல்லூரி மாணவி ரெயில் தண்டவாளத்தில் சடலமாக மீட்பு

ரெயில்வே போலீசார் விசாரணை

கோவில்பட்டி, டிச: 04

கோவில்பட்டி மந்தி தோப்பு கணேஷ் நகரைச் சேர்ந்த சிவ சங்கரநாராயணன் என்பவரது மகள் ரம்யா(18). இவர் மதுரையில் நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார். விடுமுறைக்காக ஊருக்கு வந்த ரம்யா. நேற்று ஜெராக்ஸ் எடுக்க செல்வதாக கூறி விட்டு வீட்டை விட்டுச்சென்றுள்ளார். வெகுநேரமாகியும் ரம்யா வீடு திரும்பவில்லை என்பதால் அவரது பெற்றோர்கள் அவரை தேடியுள்ளனர். இதற்கிடையில் இனாம் மணியாச்சி கிருஷ்ணா நகர் ரெயில்வே சுரங்க பாலத்திற்கு அருகே யுள்ள ரெயில் தண்டவாளத்தில் இளம்பெண் சடலம் கிடப்பதாக ரெயில்வே போலீசாருக்கு தகவல் கிடைத்தையடுத்து.

ரெயில்வே போலீசார் விரைந்துசென்றுபார்த்த போது அது கல்லூரி மாணவி ரம்யா தான் என்பது அவரது அடையாள அட்டையின் மூலம் தெரியவந்தது.

இதையெடுத்து அவரது குடும்பத்திற்கு தகவல் வழங்கிய ரெயில்வே போலீசார் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெராக்ஸ் எடுக்க சென்ற நர்சிங் கல்லூரி மாணவி ரெயில்வே தண்டவாலத்தில் சடலமாக கிடந்த சம்பவம் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ரெயில்வே தண்டவாளத்தினை கடக்கும் போது ரெயிலில் அடிபட்டு உயிரிழந்தாரா அல்லது ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாரா?

வேறு எதுவும் காரணமா ? என்பது குறித்து ரெயில்வே போலீசர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பணம் கேட்டு மூதாட்டியை தாக்கிய மகன் கைது

கூடலூர், டிச. 04

தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள குள்ளப்பகவுண்டன்பட்டி யூனியன் பள்ளி தெருவை சேர்ந்தவர் மூக்கம்மாள் (75). அவரது கணவர் பாண்டியன் 7 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போனார். இவரது மகன் இளங்கோவன் (43). இளங்கோவனுக்கு குடி பழக்கம் உள்ளதால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இவரது மனைவி இவரிடம் கோபித்துக் கொண்டு சென்று விட்டார். அதனால் இளங்கோவன் அவரது மகள் ஜெயமதி, தாயார் மூக்கம்மாள் மூவரும் ஒன்றாக வசித்து வந்தனர்.

கூலி வேலைக்குச் செல்லும் இளங்கோவன், தாயார் மூக்கம்மாள் இடம் கொடுக்கும் பணத்தில், செலவு போக மீதியை பேத்தி ஜெயமதியின் பெயரில் போஸ்ட் ஆபீசில் சேமித்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் இளங்கோவன் தாயார் மூக்கம்மாளிடம் 2000 ரூபாய் கொடுத்துள்ளார். அந்தப் பணத்தை வழக்கம் போல் மூக்கம்மாள் போஸ்ட் ஆபீஸில் சேமிப்பு கணக்கில் போட்டுள்ளார். நேற்று தயாரிடம் கொடுத்த பணத்தை இளங்கோவன் கேட்டுள்ளார். அதை போஸ்ட் ஆபீசில் போட்டதாக மூக்கம்மாள் சொன்னதும், என்னை கேட்காமல் ஏன் பணத்தை போட்டாய் என்று கூறி தாயாரிடம் சண்டை போட்டு அடித்து காயப்படுத்தி உள்ளார். பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் சண்டையை விலக்கி விட்டு, காயமடைந்த மூக்கம்மாளை கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரிடம் பெற்ற வாக்குமூலத்தின் படி, கூடலூர் தெற்கு சப்இன்ஸ்பெக்டர் செல்வராஜ் வழக்கு பதிவு செய்து, இளங்கோவனைகைது செய்து ரிமாண்டுக்கு அனுப்பி வைத்தார்.

டிசம்பர் 5–ம் தேதி

டாஸ்மாக் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச.04–

டாஸ்மாக் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:– டாஸ்மாக் ஊழியர்கள் ஏற்கெனவே கடும் வேலைப்பளுவால் தவிக்கின்றனர்.

இந்நிலையில், காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்ட அமலாக்கம் என்பது சட்டத்துக்கும், இயற்கை நியதிக்கும் எதிரானதாகும்.

இதுதொடர்பானவழக்கில் நீதிமன்றம் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை, காலி மது பாட்டில்களைத் திரும்பபெறும். திட்டத்தை நிறுத்தி வைக்கவும், மாற்று திட்டத்தை உருவாக்கவும் வலியுறுத்தி டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் வரும் 5–ம் தேதி அனைத்து மாவட்டத்த லைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

பிரேமலதா விஜயகாந்த் வாழ்த்து

சென்னை, டிச. 04

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலகமெங்கும் டிசம்பர் 3–ஆம் நாள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. நம் உறவினர்களாக வாழும் மாற்றுத் திறனாளிகளுக்கு இயற்கையினால் ஏற்பட்ட குறைபாட்டை நிவர்த்திக்க உதவ வேண்டும் என்பதையே இந்த நாள் நமக்கு உணர்த்துகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு என்று முதன்முதலில் அணியை உருவாக்கி நம்பிக்கையை தந்தவர் நம் தலைவர் கேப்டன்.

அனைத்து தொழில் துறைகளிலும், அரசு வேலைகளிலும், விளையாட்டுத் துறைகளிலும் நம்பிக்கையோடும், உறுதியாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மாற்றுத் திறனாளிகள் என்பதால் நம்முடைய இரக்கத்திற்கோ, பரிதாபத்திற்கோ உரியவர்கள் அல்ல. அவர்களும் நம்மில் ஒருவராக அனைத்து உரிமைகளுக்கும், மரியாதைகளுக்கும் தகுதியானவர்கள்.கடந்த 25 ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகளுக்காகதேமுதிக சார்பாகப் பல வகையிலும் பல்லாயிரக்கணக்கான பேருக்கு உதவி புரிந்து வருகிறோம். அதே போலச் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் எல்லாவித உயர்வுகளையும் நம்பிக்கையோடு பெற்று வாழ தே.மு.தி.க. சார்பில் இந்த நாளில் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சபரிமலையில்

ஐயப்ப சுவாமிக்கு 4 வகை நைவேத்தியங்கள் அதிகாரிகள் தகவல்

குமுளி, டிச.04–

சபரிமலை பிரசாதங்களில் பிரசித்தி பெற்றது அரவணை பாயசம் ஆகும். இத்துடன் ஐயப்பனுக்கு மேலும் 3 வகையான நைவேத்தியங்கள் படைக்கப்படுகின்றன. அதிகாலையில் சுவாமிக்கு பஞ்சாமிர்தம் நைவேத்தியமாகபடைக்கப்படுகிறது. முதற்கால உஷத் பூஜை காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

இதில் தேங்காய் துருவலை பலமுறை இடித்து அதில் இருந்து பெறப்பட்ட பாலை சர்க்கரை சேர்த்து தயாரிக்கப்படும் பாயசத்தை சுவாமிக்கு நைவேத்தியம் செய்யப்படுவது வழக்கம்.இது இடித்துப்பிழிந்த பாயசம் எனப் படும். மதியம் நடைபெறும் உச்சிகால பூஜையின் போது சிவப்பு அரிசி, பொடித்த வெல்லம், தேங்காய், நெய் யினால் தயாரிக்கப்பட்ட அரவணையும், இரவு நடைபெறும் அர்த்த ஜாம பூஜையின் போது சீரகம், வெல்லம், சுக்கு, மிளகு சேர்த்த மருத்துவ குணம் கொண்ட கசாய கலவையான பானகம் மற்றும் எள் பாயசமும் நைவேத்தியமாக படைக்கப்படுகிறது. பாயசம் என்று சொன்னாலும் இது எள் நிறைந்து திடமாக அடை போன்று இருக்கும். ஐயப்பனுக்கு நைவேத்தியம் செய்யப்படும் பொருட்களில் அரவணை பாயசம் மற்றும் பஞ்சாமிர்தம் மட்டுமே பக்தர்களுக்குவிற்பனை செய்யப்படுகிறது என்றும், பஞ்சாமிர்தம் ரூ. 125–க்கு விற்கப்படுவதாகவும் தேவசம் போர்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்கம்

தேனி, டிச.04–

தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. அணையிலிருந்து 1,500 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது. அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்ததையடுத்து,